# உடன்பிறப்பே... 48

**நீரை.மகேந்திரன்**




# “பகுத்தறிவுப் பணிமனை!”

# வண்ணை கே.எஸ்.பாண்டியன்

**தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில் பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாக பயணித்து, கழகம் வளர்த்த வண்ணை கே.எஸ்.பாண்டியன் அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்..**

*1952-ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் 9-ஆம் தேதி, கழகத்தின் ஏடான **‘திராவிட நாடு’** கண்ணீருடன் தலையங்கம் எழுதியது: “அரசியலில் வளர்க்கப்பட்டு வரும் காட்டு முறையின் விளைவாக, நமது கண்மணிகளில் ஒருவரை இழந்துவிட்டோம். ஓர் உயிர், அதுவும் மக்களிடம் பணியாற்றிய உயிர். அதனை, கத்தி கொண்டு பிரித்துவிட்டனர். எண்ணினாலே இதயம் குமுறுகிறது! பாண்டியன் எத்தகைய சீயம்...? அவரை இருட்டுள்ளம் கொண்ட எத்தர்கள் பிரித்துவிட்டனரே நம்மை விட்டு” எனக் கசிந்து கண்ணீருடன் அந்தத் தலையங்கத்தை எழுதினார் பேரறிஞர் அண்ணா.*

*தி.மு.கழகத்தின் தேவையை முதன்முதலில் உலகுக்குக் அறிவித்த சென்னை, பவளக்காரத் தெருவுக்கும், கழகத்தின் முதல் அதிகாரப்பூர்வ அலுவலகமாக இயங்கிய அறிவகம், ராயபுரம் சூர்யநாராயண செட்டித் தெருவுக்கும் இடையில் சஞ்சீவராயன் கோயில் தெருவில் வசித்தவர். கழகத்தின் உயிர்த் துடிப்பான தொண்டர், அண்ணாவின் அன்புத் தம்பி கே.எஸ்.பாண்டியன். அப்போதைய சென்னையில் அவருக்குத் தனியாக முகவரி தேவையில்லை. ‘வண்ணைப் பாண்டியன்’ என்றால், இப்போதும் நினைவில் நிற்கும் கழகத்தின் முன்னோடி. முத்தமிழறிஞர் கலைஞர் ‘உடன் பிறப்பே’ என எந்நாளும் நினைத்த மூத்தவர் வண்ணை பாண்டியன்.*

## வண்ணை சொன்னால் நடக்கும்

*1950 களில் சென்னையில் பல இடங்களில் கழகப் பொதுக்கூட்டங்கள் தொடர்ந்து நடைபெறும். அந்தக் கூட்டங்களுக்கு இப்போது உள்ளதுபோல மேடை அமைக்கும் வசதிகள், பந்தல் அலங்காரம் எல்லாம் கிடையாது. மாட்டு வண்டிகளைச் சேர்த்தாற்போல கட்டினால், அதுதான் மேடை. அப்படி தினசரி மேடைகளை அமைப்பது எனில், வண்ணை பாண்டியனால்தான் முடியும் என அண்ணா அறிவார்.*

*சென்னை ராபின்சன் பூங்காவில் கழகத்தின் தொடக்க நாள் கூட்டத்தை, சிறப்பாக நடத்தக் காரணமானவர்களில் வண்ணை பாண்டியனும் ஒருவர் என கழகக் கல்வெட்டில் இடம்பெற்றவர்.*

## பகுத்தறிவுச் செயல்வீரர்

*நீதிக்கட்சி காலத்தில் இருந்தே வண்ணை பாண்டியன் தீவிர பகுத்தறிவுப் பிரச்சாரகர். வடசென்னையில் அவர் வசித்த பகுதியில் பகுத்தறிவுப் படிப்பகத்தை நடத்தி வந்தவர். 1937-ஆம் ஆண்டில் தந்தை பெரியார் முன்னெடுத்த இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தில் தளராத உறுதியுடன் நின்றவர். அந்தப் போராட் டத்தின்போது சிறைசென்ற செயல்வீரர் பாண்டியன்.*

*நீதிக்கட்சி, திராவிடர் கழகமானபோது, சென்னை யில் மிகத் தீவிரமாகச் செயல்பட்ட இளைஞர் களாக வண்ணை பாண்டியன், என்.வி.நடராசன், கோவிந்தசாமி ஆகியோர் இருந்தனர்.*

*1946-ஆம் ஆண்டு, பிப்ரவரி 2-ஆம் தேதி வெளியான ‘குடிஅரசு’ இதழில், வடசென்னை தமிழ் இளைஞர் மன்றத்தின் சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் பாண்டியன் உரை நிகழ்த்த உள்ள குறிப்பு வெளியாகியுள்ளது. திராவிடர் கழக வண்ணைப் பகுதி நிர்வாக உறுப்பினராகவும் இருந்தவர் பாண்டியன். அந்த வகையில், அண்ணாவுடன் நட்புறவு கொண்டிருந்தவர் பாண்டியன்.*

## கழகத்தின் வளர்ச்சியே பகை

*கழகத்தின் தேவையைக் கருத்து வடிவமாக, பேரறிஞர் அண்ணா முன்வைத்த நாளில் இருந்தே, அதை ஆதரித்து ஏற்றுக் கொண்டு கழகத்தின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டார் பாண்டியன். கழகச் செயலாளர் அண்ணா, அப்போது இளையவராக இருந்த கலைஞர் உள்ளிட்டோர் கழகத்தின் தொடக்க காலங்களில் சென்னைவாசிகள் அல்ல. ஆனால், சென்னையில் கழகத்தின் வளர்ச்சி வண்ணை போன்றோரால் மிக வீச்சாக இருந்தது.*

*கழகம் தொடங்கப்பட்ட சில ஆண்டுகளிலேயே, வடசென்னைப் பகுதி உழைக்கும் மக்கள் திரளாக கழகத்தின் பக்கம் அணி திரளத் தொடங்கினர். அதனால், கழகத்தின் வளர்ச்சியைப் பொறுக்காத அரசியல் எதிரிகள், அவரைத் தீர்த்துக் கட்ட நாள் குறித்தனர். அப்படித்தான், 1952-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் கழக நிகழ்ச்சிக்காக வெளியில் சென்று வந்தவரின் உயிரைக் குடித்தனர் எதிரிகள்.*

**கூட்டங்களுக்கு இப்போது உள்ளதுபோல மேடை அமைக்கும் வசதிகள், பந்தல் அலங்காரம் எல்லாம் கிடையாது. மாட்டு வண்டிகளைச் சேர்த்தாற்போல கட்டினால், அதுதான் மேடை.**

*அவரது வீட்டுக்கு அருகிலேயே காத்திருந்து பாண்டியனின் கண்களில் மிளகாய்ப்பொடி தூவி, கத்தியால் குத்திவிட்டு மறைந்தனர். தடுக்க வந்த உறவினர்களையும் கொடூரமாகத் தாக்கி இருந்தனர். மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட பாண்டியன், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். அன்று அண்ணாவும் கழகத்தினரும் அடைந்த துயரத்துக்கு அளவில்லை. சென்னை நகரமே ஸ்தம்பித்தது. கொந்தளித்து நின்ற கழகத்தினரை கண்ணியம் காக்கச் செய்தார் அண்ணா.*

*பாண்டியன் படுகொலைக்கு நீதி கேட்டு, 07.12.52 அன்று, சென்னையில் மாபெரும் கண்டன ஊர்வலத்தை நடத்தியது கழகம். தமிழ்நாடு முழுவதுமிருந்து கழகத்தினர் கலந்துகொண்டு கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் ‘நல்லதீர்ப்பு தேவை’ என முழக்கமிட்டுச் சென்றனர்.*

## சஞ்சீவராயன் கோயில் தெரு

*“கொள்கைக்காக வாழ்ந்து, கொள்கைக்காக உயிரை இழந்த அருமை வீரர் ஆற்றிய தொண்டுப் பாதையில், அவர் சிந்திய ரத்தத்தை நினைவில் கொண்டு நாம் சென்று கொண்டிருப்போம்” என வண்ணை பாண்டியன் படுகொலை செய்யப்பட்ட மறுநாள் 9.11.1952 அன்று ‘திராவிட நாடு’ நாளிதழ் தலையங்கம் எழுதியது. அந்த உறுதியை வழி வழியாகக் காத்து வருகிறது கழகம்.*

*வண்ணை சஞ்சீவராயன் கோயில் தெருவில், அவர் உருவாக்கி இருந்த கழகத்தின் பகுத்தறிவுப் படிப்பகம் மற்றும் பணிமனையை அவருக்குப் பின்னரும் கழகத்தினர் தொடர்ந்து நடத்தி வந்தனர். அந்தப் படிப்பகம் கழகத்தின் பேச்சாளர்களை உருவாக்கும் பணிமனையாக இயங்கியது.*

*1955-ஆம் ஆண்டு ‘நம்நாடு’ இதழில், ‘இந்தியாவின் வடக்கும் தெற்கும்’ என்கிற தலைப்பில் வண்ணை பாண்டியன் பணிமனையில் கழகத்தின் பேச்சாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்ட நிகழ்வினை நாவலர் அவர்கள் பதிவு செய்துள்ளார். 1957 - ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வெளியான ‘நம்நாடு’ இதழில் ‘கடமை’ என்கிற பொருளில் பேச்சாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்ட குறிப்பு உள்ளது.*

*அவர் மறைவுக்குப் பின்னர் கழகத்தின் மாநாடுகளில் வண்ணை பெயர் கொண்ட அரங்குகள், வாயில்கள் அமைக்கப்பட்டு வரலாற்றை நினைவூட்டியது கழகம். பொதுக்கூட்ட நிகழ்ச்சிகளுக்கு, ‘பாண்டியன் திடல்’ பெயர் சூட்டப்பட்டன. ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் மாதம் வண்ணாரப் பேட்டையில் பொதுக்கூட்டம் நடைபெறும். 1955-ஆம் ஆண்டில் டிசம்பர் 11-ஆம் தேதி வண்ணை பாண்டியன் திடலில் (கல்லறை மைதானம்) நடந்த பொதுக்கூட்டத்தில் சிறப்புரையாற்றியவர் கவிஞர் கண்ணதாசன் என்பது குறிப்பிடத்தக்கது.*

*வண்ணை பாண்டியன் திடலில் உரை நிகழ்த்தாத கழக முன்னோடிகளே இல்லை. அண்ணா, நாவலர், கலைஞர், பேராசிரியர் தொடங்கி, கழகத்தின் மூத்த முன்னோடிகள் அனைவரும் பேசிய இடமாக வண்ணை பாண்டியன் திடலைக் குறிப்பிடலாம். 1962-ஆம் ஆண்டில் சென்னை மாநகராட்சி சார்பில், அவர் பெயரில் அந்த இடத்தில் பூங்கா உருவாக்கப்பட்டது.*

*கழகம் வளர்ந்து வந்த காலத்திலேயே தியாகியானவர் வண்ணை பாண்டியன். அதன் பின்னர் கழகத்தின் வளர்ச்சியை அவர் கனவு கண்டதுபோல அமைத்து, அந்தக் கனவுக்கு உயிர் கொடுத்தனர் அண்ணாவும் கலைஞரும் மற்றும் முன்னோடிகளும். அவர் மறைவின்போது, தனது ரத்தத்தால் நமது இதயங்களிலும், கழகத்தின் கொடியிலும், செந்நிறத்தைத் தடவிவிட்டார் தோழர் பாண்டியன் என்றார் அண்ணா.*

*“கொள்கைக்காக வாழ்ந்து, கொள்கைக்காக உயிரையும் இழந்த அந்த அருமை வீரர் ஆற்றிய தொண்டுப் பாதையில் அவர் சிந்திய ரத்தத்தை நினைவில் கொண்டு நாம் சென்று கொண்டிருப்போம் வாழ்க பாண்டியன் நாமம்! ஒழிக அரசியல் வெறி!” என அன்று உணர்ச்சிப் பெருக்கில் எழுதினார் அண்ணா. அண்ணாவின் வழியில் அயராது உழைப்போம் என உறுதி எடுத்த கழகத்தினருக்கு அந்தச் சொற்கள் என்றென்றைக்கும் உணர்வுத் தீயாகும்!*

**...துடிக்கும்**

## ஏன் இருக்க வேண்டும், அறநிலையத்துறை?



பிரதமர் மோடி, ஒன்றிய அமைச்சர் நிர்மலா சீதாராமன் உட்பட பா.ஜ.க.-வினர் சமீப காலமாகக் குறிவைத்துப் பேசும் விவகாரங்களில் ஒன்றாக இந்து அறநிலையத்துறையும் ஆகிவிட்டது. இந்து சமயக் கோயில்களின் வளர்ச்சிக்காக, கொள்கை முடிவெடுத்துத் திட்டங்களைச் செயல்படுத்தும் அறநிலையத்துறை, பா.ஜ.க.வின் கண்களை ஏன் உறுத்துகிறது என்பது, பொதுமக்கள் பலருக்கும் இருக்கும் ஐயம்.

ஆக்கிரமிக்கப்பட்ட கோயில் சொத்துகள் மீட்பு, அன்னதானம், கிராமப் பூசாரிகள் நலவாரியம், அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம், அன்னைத் தமிழில் அர்ச்சனை, பெண் அர்ச்சகர்கள் நியமனம் என அறநிலையத்துறை செய்த சாதனைகள் ஏராளம். ஆனால், அதையெல்லாம் பேசாமல், அறநிலையத்துறையைக் கலைக்க வேண்டுமென்று கூச்சலிடுகிறார்கள்.

இந்த வெற்றுக் கூச்சலின் சதியைத் தோலுரிக்கும் விதமாக “அரசிடம்தான் இருக்கவேண்டும் அறநிலையத்துறை... ஏன்?” என்ற கருத்தரங்கை ஏற்பாடு செய்திருக்கிறது திராவிட நட்புக் கழகம். 10.03.2024 அன்று மாலை 6.30 மணிக்கு சென்னை, அண்ணா சாலை அன்பகத்தில் இக்கருத்தரங்கம் நடைபெறுகிறது. பங்கு பெறுவீர், விளக்கம் பெறுவீர்.

## ஃப்ளாஷ்பேக்



முத்துமாரியப்பன்



### ஊக்கம் தந்த உரையாடல்!

ஏறத்தாழ 30 ஆண்டுகளுக்கு முன் அன்றைய கழக இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய கழகத் தலைவர் அண்ணன் தளபதியார் அவர்கள் தமிழ்நாடெங்கும் சூறாவளிச் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அவர் சென்னை திரும்பியவுடன் அன்றைய கலைஞர் நகர் பகுதிக் கழகச் செயலாளர் க.தனசேகரன் அவர்களுடன் அறிவாலயம் சென்று, தளபதியார் அவர்களை மரியாதை நிமித்தமாக சந்தித்தோம். அப்போது, இளைஞர்களாகிய எங்களைப் பார்த்து “உங்களைப் போன்ற இளைஞர்கள் தொடர்ந்து களப்பணி ஆற்றுங்கள். கழகம் உறுதுணையாக இருக்கும்” என்று தாயுள்ளத்துடன் அளவளாவியது எங்களுக்கு ஊக்கம் தருகின்ற வார்த்தைகளாகச் செவிகளில் இன்றும் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

**–த.முத்துமாரியப்பன், மாவட்டப் பிரதிநிதி,
சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### நெருக்கடியிலும் துடிப்பு!

1975-ஆம் ஆண்டு, நெருக்கடி நிலை அமல்படுத்தப்பட்ட பின்னர், தமிழ்நாட்டில் மாவட்ட மாநாடுகளைத் தொடர்ச்சியாக கழகம் நடத்தியது. ஆகஸ்ட் 9, 10 தேதிகளில் நெல்லை மாவட்ட 5-வது மாநாடு, 16, 17 தேதிகளில் சேலம் மாவட்டக் கழக 5-வது மாநாடு, அக்டோபர் மாதத்தில் புதுக்கோட்டை மாவட்டக் கழக 5- வது மாநாடு, நவம்பர் மாதம் மதுரையில் மகளிர் அணி மாநாடு, கன்னியாகுமரி மாவட்டக் கழக 3-வது மாநாடு டிசம்பர் மாதத்தில் கோவையில் ‘கழகத்தின் மாநில மாநாடு’ என கழகத்தை உயிர்த் துடிப்புடன் வைத்திருந்தார் கலைஞர்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

**412**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131